தவெக அரசின் வாக்குறுதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றது

முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன்

திமுக நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய சேலம் மத்திய மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ரா. ராஜேந்திரன்.

சேலம், மே 15: நடைமுறைக்கு ஒவ்வாத வாக்குறுதிகளை தந்து தவெக அரசு மக்களை ஏமாற்றி உள்ளதாக முன்னாள் அமைச்சர் ரா. ராஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

சேலம் மத்திய மாவட்டத்துக்கு உள்பட்ட மேற்கு சட்டப் பேரவைத் தொகுதி திமுக நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ரா. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மேற்கு தொகுதியில் உள்ள பகுதி செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ரா. ராஜேந்திரன் பேசுகையில், தமிழ்நாட்டில் சமூக வலைதளங்களில் வந்த தகவலை நம்பி பொது மக்கள் ஏமாற்றமடைந்தனர். இன்னும் 6 மாதங்களில் மக்கள் தங்களது தவறை உணர்வார்கள். நடைமுறைக்கு ஒவ்வாத வாக்குறுதிகளை கொடுத்து மக்களை தவெக அரசு ஏமாற்றி உள்ளது. வெற்றி வாய்ப்பை இழந்தாலும் மக்கள் பணியில் தொடர்ந்து திமுக ஈடுபடு. வரும் உள்ளாட்சித் தேர்தலில் திமுகவெற்றிக்காகபாடுபடவேண்டும் என்றார்.

மத்திய மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் ரகுபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற இளைஞர் கைது

தம்மம்பட்டி, மே 15: தம்மம்பட்டி அருகேவீட்டில் தூங்கிக்கொண்டிருந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

தம்மம்பட்டியை அடுத்த வீரகனூர் புளியங்குறிச்சியைச் சேர்ந்தவர் ரஞ்சித்குமார் (30). இவர் அதே பகுதியில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 47 வயது பெண்ணிடம் வியாழக்கிழமை இரவு தவறாக நடக்கமுயன்றுள்ளார். அப்போது, அப்பெண் கூச்சலிட்டதால் அங்கிருந்தவர்கள் ரஞ்சித்குமாரை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுகுறித்து வீரகனூர் போலீஸார் வழக்குப் பதிந்து ரஞ்சித்குமாரை கைது செய்தனர்.

சங்ககிரியில் 3 மதுக்கடைகளை அகற்ற சிபிஎம் வலியுறுத்தல்

சங்ககிரி, மே 15: சங்ககிரி நகரில் பேருந்து நிலையம், பள்ளிக்கு அருகே உள்ள 3 மதுக்கடைகளை அகற்ற வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கோட்டாட்சியரிடம் வெள்ளிக்கிழமை மனு அளிக்கப்பட்டது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சங்ககிரி வட்ட செயலாளர் எ. ஆறுமுகம் தலைமையில் வட்டக் குழு உறுப்பினர்கள் ஆர். ராஜேந்திரன், டி. செந்தில்குமார், நகர்மன்ற உறுப்பினர் எ. மாணிக்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி சங்ககிரி வட்டாரத் தலைவர் என். ஜெயலட்சுமி, மதிமுக நிர்வாகி இளவரசன் ஆகியோர் கோட்டாட்சியர் ம.மு.தெ. கேந்திரியாவிடம் அளித்த மனு விவரம்:

சங்ககிரி நகர் பழைய பேருந்து நிலையம் எதிரே இரு மதுக்கடைகள், புதிய பேருந்து நிலையம் அருகே ஒரு மதுக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த 3 கடைகளும் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றன. புதிய பேருந்து நிலையம் பகுதியில் தினசரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.

அதேபோல பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள மதுக்கடை, பொதுமக்கள் வசிக்கும் இடத்தில் உள்ளது. இரவு நேரங்களில் அக்கடை வழியாக பொதுமக்கள் செல்ல முடியாத நிலை உள்ளது.

இதனால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள 3 மதுக்கடைகளும் அகற்ற வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுக்கடைகளை அகற்றக் கோரி சங்ககிரி கோட்டாட்சியர் ம.மு.தெ. கேந்திரியாவிடம் மனு அளித்த சிபிஎம் வட்டச் செயலாளர் எ. ஆறுமுகம் உள்ளிட்டோர்.

வாழப்பாடியில் வேன் மோதியதில் இளைஞர் உயிரிழப்பு

வாழப்பாடி, மே 15: சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே இருசக்கர வாகனம் மீது பிக்கப் வேன் மோதியதில் இளைஞர் உயிரிழந்தார்.

அருண்குமார்

வாழப்பாடியை அடுத்த செக்கடிப்பட்டியைச் சேர்ந்த சக்திவேல் மகன் அருண்குமார் (20), கூலித் தொழிலாளி. இவர் துக்கியாம்பாளையம் பகுதியில் இருந்து வாழப்பாடி நோக்கி பேளூர் சாலையில் இருசக்கர வாகனத்தில் வெள்ளிக்கிழமை மாலை சென்று கொண்டிருந்தார்.

அப்போது, வாழப்பாடி பகுதியில் இருந்து பேளூர் நோக்கி சென்ற பிக்கப் வேன், இவரது இருசக்கர வாகனம் மீது மோதியது. இந்த விபத்தில் படுகாயமடைந்த அருண்குமாரை அங்கிருந்தவர்கள் மீட்டு வாழப்பாடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு, அவரை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே அருண்குமார் இறந்துவிட்டதாக தெரிவித்தார்.

இதுகுறித்து வாழப்பாடி காவல் ஆய்வாளர் வேல்முருகன், எஸ்எஸ்ஐ சீனிவாசன் ஆகியோர் வழக்குப் பதிவு செய்து, பிக்கப் வேன் ஓட்டுநரை தேடிவருகின்றனர்.

நீட் தேர்வை ரத்துசெய்யக் கோரி காங்கிரஸார் ஆர்ப்பாட்டம்

சேலம், மே 15: நீட் தேர்வை ரத்துசெய்யக் கோரி சேலத்தில் காங்கிரஸார் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிபிஐ இயக்குநர் பிரவீன் சூட்டிற்கு ஓராண்டு பதவி நீட்டிப்பு வழங்கிய மத்திய பாஜக அரசை கண்டித்தும், நீட் தேர்வில் குளறுபடி, பெட்ரோல், டீசல் விலை உயர்வு ஆகியவற்றை கண்டித்தும் காங்கிரஸ் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சேலம் மாநகர் மற்றும் மேற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாநகர் மாவட்டத் தலைவர் சாரதா தேவி, மேற்கு மாவட்டத் தலைவர் ரத்தினவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். நீட் தேர்வில் நடந்த குளறுபடிகளின் காரணமாக தேர்வு ரத்து மற்றும் நீட் தேர்வை நடத்த மாநிலங்களுக்கு அனுமதி வழங்க மறுப்பை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நீட் தேர்வை ரத்துசெய்ய வலியுறுத்தி சேலம் கோட்டை மைதானத்தில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸார்.

சங்ககிரி

சங்ககிரி அருகே உள்ள ஐவேலி துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படுவதாக சங்ககிரி மின் வாரிய செயற்பொறியாளர் எஸ். சங்கரசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மின் தடை செய்யப்படும் பகுதிகள்:

சங்ககிரி நகர், சங்ககிரி ரயில் நிலையம், தேவண்ணகவுண்டனூர், சுண்ணாம்புகுட்டை, ஐவேலி, ஒலக்கசின்னானூர், தங்காபூர், அக்கமாபேட்டை, வடுகப்பட்டி, இடையப்பட்டி, வளையசெட்டிப்பாளையம், ஆவரங்கம்பாளையம், வைகுந்தம், இருகாலூர், வெள்ளையம்பாளையம், காளிகவுண்டம்பாளையம்.

கனரா வங்கி Canara Bank (அரசுடமையாக்கப்பட்ட வங்கி)

ARM கிளை - திருச்சி
முதல் தளம், முத்தய்யா டவர்ஸ், வில்லியம்ஸ் ரோடு, திருச்சி-620001.Ph : 0431-2416067

மின் ஏல விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துகளுக்கானது)

2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், பத்திரப்படுத்துதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் விதிகள் 8 (6) விதிகளின் கீழ் விற்பனை அறிவிப்பு (E-Auction Sale Notice)

கடனாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில் கடனாளர்கள் 1) M/s. மகாலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ், உரிமையாளர் : திரு. D.கதிரவன், 15/1-296 I, மகாலட்சுமி கார்டன், சின்னகவுண்டன்பாளையம், ஆலம்பாளையம் அஞ்சல், பள்ளிபாளையம் கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் - 638008. 2) திரு. D.கதிரவன், த/பெ. V.N.தனகோடி, 15/1-296 I, மகாலட்சுமி கார்டன், சின்னகவுண்டன்பாளையம், ஆலம்பாளையம் அஞ்சல், பள்ளிபாளையம் கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் - 638008. 3) திருமதி. D.பிரேமா, க/பெ. V.N.தனகோடி, 15/1-296 I, மகாலட்சுமி கார்டன், சின்னகவுண்டன்பாளையம், ஆலம்பாளையம் அஞ்சல், பள்ளிபாளையம் கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் - 638008. 4) திரு. V.N.தனகோடி, த/பெ. நடேசன், 15/1-296 I, மகாலட்சுமி கார்டன், சின்னகவுண்டன்பாளையம், ஆலம்பாளையம் அஞ்சல், பள்ளிபாளையம் கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் - 638008 ஆகியோர் திருச்சி ARM கிளைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 26.04.2026-ன் படி ரூ.1,38,14,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து பதினான்காயிரம் மட்டும்) + பின்வட்டி மற்றும் இதர செலவுகளுடன் திரும்ப பெறுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்தினை கனரா வங்கி, திருச்சி ARM கிளையின் அதிகாரம் பெற்ற அதிகாரி கையகப்படுத்தி சுவாதீனம் பெற்று "எங்கு அமைந்துள்ளதோ அங்கு உள்ளது உள்ளபடி நிலையில்" பொது ஏல விதி மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 10.06.2026 அன்று விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.1,93,88,000/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து எண்பத்து எட்டாயிரம் மட்டும்) ஏல முன்வைப்புத் தொகை ரூ.19,38,800/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து எண்ணூறு மட்டும்) 09.06.2026 அன்று மாலை நான்கு மணிக்கு முன்னதாக ஏலமுன்வைப்புத் தொகையை செலுத்த வேண்டும்.

சொத்துகளின் விபரம் : இச்சொத்து அதன் மீதுள்ள எந்த கட்டிடமானது நாமக்கல் பதிவு மாவட்டம், குமாரபாளையம் துணை பதிவு மாவட்டம், குமாரபாளையம் தாலுக்கா, ஆலம்பாளையம் டவுன் பஞ்சாயத்து, சபை சங்கிலி அக்ரஹாரம் கிராமம், கதவு எண்கள்.296 C, D, G, H-ல் அமைந்துள்ளது. இதில் புஞ்சை ஹெக்டேர் 0.60.5 புஞ்சை ஏக்கர் 1.50 மதிப்பீடு 2.33 R S No.408/4, பட்டா எண்.1058 ல் உள்ள இதன் பரப்பளவு 10208½ ச.அடி. எல்லைகள் : வாகதேவனின் சொத்திற்கு வடக்கு, வாகதேவனின் சொத்திற்கு தெற்கு, காளியண்ணனின் வகையாற நிலங்களுக்கு கிழக்கு, செங்கோடனின் சொத்திற்கு மேற்கு. மொத்தப் பரப்பளவு 10208½ ச.அடி இதற்குள் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும், மனையை சுற்றியுள்ள அனைத்து சாலைகளையும் முழுமையாக அணுகும் வசதி உள்ளது.

ஏலத்திற்கான தேதி & நேரம் : 10-06-2026 & மதியம் 12.30 மணி முதல் 1.30 மணி
(5 நிமிட நீடிப்புடன் விற்பனை முடியும் வரை)

ஏல முன்வைப்புத் தொகையை 09-06-2026 அன்று மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம் : அலுவலக நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் அதிகாரம் பெற்ற அதிகாரியின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்

இணையதள மின் ஏல விற்பனைக்கான விதிகள் & நிபந்தனைகளை அறிந்து கொள்ள, கனரா வங்கியின் www.canarabank.com என்ற இணையதளத்திலோ அல்லது அலுவலக நாட்கள் மற்றும் அலுவலக நேரத்திற்குள்ளாக தொடர்பு கொள்ளலாம்.

இடம் : திருச்சி
நாள் : 12-05-2026
Portal of E-Auction : https://baanknet.com
அங்கீகரம் பெற்ற அதிகாரி கனரா வங்கி

தினமணி சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

சேலம் மேட்டூர் சங்ககிரி எடப்பாடி	95666 11366
ஏற்காடு ஆத்தூர்	99946 46385
தருமபுரி	: 84896 34827

உதவி மைய எண் : 88070 00218

தினமணி

எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

சேலம்	98405 90012
ஓமலூர்	94433 93373
மேட்டூர்	94432 23065
ஏற்காடு	94432 01447
சங்ககிரி	94434 14850
ஆத்தூர்	93642 22063
தம்மம்பட்டி	94434 71248
எடப்பாடி	98659 77117
வாழப்பாடி	96009 69118
ஆட்டையாம்பட்டி	94892 94473

எடப்பாடியில் திமுக செயற்குழு கூட்டம்

எடப்பாடியில் நடைபெற்ற திமுக செயற்குழு கூட்டத்தில் பேசிய மக்களவை உறுப்பினர் டி.எம். செல்வகணபதி.

எடப்பாடி, மே 15: சேலம் மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் எடப்பாடியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

எடப்பாடியை அடுத்த நைனாம்பட்டியில் உள்ள தனியார் அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. பங்கேற்று பேசியதாவது:

பேரவைத் தேர்தல் முடிவுகள் யாரும் எதிர்பார்க்காத ஒன்றாகும், 35 ஆயிரம் சோசியல் மீடியா குழுக்களை உருவாக்கி, அதன்மூலம் நாள் ஒன்றுக்கு 2 கோடி நபர்களை தொடர்புகொண்டு தந்திரமாக சூழ்ச்சி செய்துள்ளனர். குதிரை பேரத்தின் மூலம் நடைபெறும் தவெக ஆட்சி நீண்ட நாள்கள் நீடிக்காது.

தமிழகத்தில்மீண்டும்தேர்தல்வரவாய்ப்பு உள்ளதால் கட்சி நிர்வாகிகள் தொடர்ந்து சிறப்பாக செயல்பட வேண்டும். முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாள் விழா நிகழ்ச்சியை சேலம் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கொண்டாட வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சம்பத்குமார், எடப்பாடி நகராட்சி தலைவர் டி.எஸ்.எம். பாஷா, மாநில செயற்குழு உறுப்பினர் பி.ஏ. முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் நல்லதம்பி, பூவாக்கவுண்டர், பரமசிவம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட
எண்.72, மே சுபிளவர் 'E' கேஸில், பாக்டீரியாலஜிஸ்ட் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.2,79,87,008/- (01.05.2026 தேதி அன்றுள்ள தொகையை திருமதி.எல்லம்மாள். D, திரு.S.தேவராஜ், திரு.இளவரசன். D மற்றும் திருமதி.ஷர்மிளா தேவி.D என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்டு ஈடுவைக்கப்பட்ட, ஆக்கப்பூர்வ சுவாதீனம் (Constructive Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 25.06.2026 தேதியில் (காலை 10.30 முதல் 11.30 மணி வரை) விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.3,16,91,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.31,69,100/-.

அசையாச் சொத்து விபரம்

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட உட்பிரிவு மறுசர்வே / டவுன் மறுசர்வே வார்டு D, பிளாக் 12, டவுன் சர்வே எண்.130 பின்னர் மாற்றப்பட்ட வார்டு AC, பிளாக் 12, டவுன் சர்வே எண்.130/1ல் உள்ள 0.0327.5 ச.மீ அல்லது 3525 ச.அடியில் நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் சேர்ந்த குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 08.05.2026
இடம் : கோயம்புத்தூர்
ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்
(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டது)
பெருநிறுவன அடையாள எண் (CIN): L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8,ஆவது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600031. தொ.பே.: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022.

IDFC FIRST Bank

பிற்சேர்க்கை IV [விதி 8(1)]
சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடின் (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டது) அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3–இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் 17.01.2026 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர், கூட்டுக் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களான 1. ராஜமாணிக்கம் குருசாமி, 2. தமிழிசெல்வி பால்ராஜ் எனும் முறையில் ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள 14.01.2026 நாள்படியான ரூ.3,99,790.82/–(ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூறு மற்றும் பைசா எண்பத்திரண்டு மட்டும்) தொகையை அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் அத்தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால், கடன்தாரருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (4) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8–இன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்தி 14ஆம் நாள் மே 2026 அன்று கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை நேரடி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்கு (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டது) ரூ.3,99,790.82/– (ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூறு மற்றும் பைசா எண்பத்திரண்டு மட்டும்) தொகையை வட்டியுடன் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)–இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரர் இதன் மூலம் அழைக்கப்படுகிறார்.

அசையாச் சொத்துக்களின் விவரம்

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் – சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், இடப்படி சார்பதிவு அலுவலக வட்டாரம், இடப்படி வட்டம், கிராம எண் 23 குறும்பப்பட்டி கிராமம், வீரப்பம்பாளையம். அருந்ததியர் நத்தம் முந்தைய சர்வே எண் 260, தற்போதைய சர்வே எண் 260/2, இதில் நத்தம் மனைவாரி தோராய பட்டா சர்வே எண் 416/9, நத்தம் பரப்பளவு 0.0074.0 சதுர மீட்டர், கிஸ்தி ரூ.2.00, பரப்பளவு 796 சதுர அடிக் கொண்ட வீட்டு மனை உட்பட. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: குருசாமி நிலங்கள், மேற்கு: பழனிச்சாமி நிலங்கள், வடக்கு: பழனிச்சாமி நிலங்கள் மற்றும் பொதுச் சந்து, தெற்கு: பொன்னுவேல் நிலங்கள்.

மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள அளவு: தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் – 6.2 மீட்டர் 20–1/4 அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் – 5.2 மீட்டர் 17 அடி, கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 12.8 மீட்டர் 42 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் – 13.2 மீட்டர் 43–1/2 அடி.

மொத்தப் பரப்பளவு 796 சதுர அடிக் கொண்ட மனை 10–1/4 X 31 = மொத்தம் 317–1/4 சதுர அடி, 29–1/2 மீட்டர் ACC சிமெண்ட் சீட் மற்றும் வழக்கமான வழிப்பாதை, பொது சாலை மீதான பொதுவான உரிமைகள் முதலானவை உட்பட.

ஒம்/–
அதிகாரப்பூர்வ அலுவலர்
நாள்: 14.05.2026
IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்
இடம்: தமிழ்நாடு
(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர்
கடன் கணக்கு எண்: 133674601
IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டது)

SBI பாரத ஸ்டேட் பாங்கு

RACPC SALEM, SBI பில்டிங், முதல் தளம், கோட்டை மெயின் ரோடு, சேலம் - 636 001.
Tel: 0427-2212162, 9385945912, Fax: 0427-2212169, E-mail: rasecc.salem@sbi.co.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான அமலாக்கச் சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர் (களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, பாரத ஸ்டேட் பாங்கின் (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ்க்குறிப்பிட்ட அசையா சொத்துக்கள், ஜாமீன் பெற்று கடனளித்த பாரத ஸ்டேட் பாங்கிற்கு திரு. மாதேஸ் பெருமாள் மற்றும் திருமதி. சத்யா மாதேஸ், கதவு எண்.1/62/2, பிளாட் எண்.28, பழைய ச.எண்.40/1H, புதிய ச.எண்.40/1H1A1A, கணபதி நகர், நல்லம்பட்டி கிராமம், சேலம் மேற்கு ஜாயிண்ட் III துணை பதிவு டிவிசன், முடுகுறை பஞ்சாயத்து, வீரபாண்டி யூனியன், சேலம் தாலுக்கா, சேலம் மாவட்டம் - 636307 அவர்களிடமிருந்து நிலுவையாக உள்ள தொகை 13-05-2026 அன்றுள்ளபடி ரூ.64,59,768/- (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று அறுபத்து எட்டு மட்டும்) மற்றும் பின்னிட்ட வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 25-06-2026 அன்று விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்து விபரம்

இச்சொத்தானது சேலம் மாவட்டம் 636307, சேலம் மேற்கு ஜாயிண்ட் III துணை பதிவு டிவிசன், சேலம் தாலுக்கா, நல்லம்பட்டி கிராமம், வீரபாண்டி யூனியன், முடுகுறை பஞ்சாயத்து, பழைய சர்வே எண்.40/1H, புதிய சர்வே எண்.40/1H1A1A பகுதியில் அமைந்துள்ளது. பரப்பளவு 2212.50 ச.அடி சொத்திற்குண்டான எல்லைகள் : வடக்கே : 20'0" அகல கிழமேல் ரோடு, தெற்கே வடிவேல் வகையாற விவசாய நிலம், கிழக்கே பிளாட் எண்.29, குப்தீன் ரஹ்மான் நிலம், மேற்கே பிளாட் எண்.27, கரேஷ்குமார், சரோஜா வகையாற விவசாய நிலம். நிலத்தின் மொத்தப்பரப்பளவு 2212.50 ச.அடி இதனுடன் பொதுவழிப்பாதை மற்றும் 16.11.2018 தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் ஆவண எண்.2268/2018-ன் அதன்படி அனைத்து உரிமைகளும் சேர்ந்தது.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.65,52,000/- (ரூபாய் அறுபத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்பு தொகை ரூ.6,55,200/-

மின்னணு ஏல விபரங்கள்

நிர்ணயிக்கப்பட்ட தொகை	Rs.65,52,000/-
முன்வைப்புத் தொகை	Rs.6,55,200/-
ஏல உயர்வு மடங்கு	Rs.50,000/-
சொத்தினை பார்வையிடும் நாள்	13-06-2026 between 11.00 am and 4.00 pm
இ–ஏலத் தேதி மற்றும் நேரம்	25-06-2026 - 11.00 AM to 2.00 PM
டெண்டர் விண்ணப்பிக்க / முன்வைப்பு